ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ வைகுண்ட

எகாதசிவிரதக்கும்மி

யென்னும்

உருக்குமாங்கதமகாராஜன்

சரித்திரக்கும்மி

இஃது

சிறுமணவூர்

முனிசாமிமுதலியா

ரவர்களால் இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

43

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வைகுண்ட

ஏகாதசிவிரதக்கும்மி

என்னும்

உருக்குமாங்கதமகாராஜன்

சரித்திரக்கும்மி.

பாயிரம்

சீரிற்சிறந்த சிரோன்மணியேபுவி
செல்வமருளும் மனோன்மணியே
பேரிற்சிறந்த விதற்பநகர்மன்னன்
பெட்பையுரைக்கத் துணைவருவாய். (க)

விண்டலப்பூசை மலர்கொடுக்குந்திரு
விதற்பதேசம் புகழ்விளங்க
அண்டர்கள்யார்க்கு முதற்கடவுளாகு
மானைமுகவன் பதந்துணையே. (உ)

தெய்வநிலமை செழித்தோங்குந்திரு
விதற்பதேசப் புகழோங்க
வைகுண்டயேகா தசிவிரதஞ்சொல்ல
வாறுமுகப்பெருமான் துணையே. (௩)

பூமிப்புகழும் விதற்பநகர்மன்னன்
புண்யவிரத மகிமைசொல்ல
நேமிகருத்தனும் வைகுண்டமேவிய
நெடியமாலின் பதந்துணையே. (௪)

விற்பொரும்சித்திர விழியணங்கே-நல்ல
விதற்பநகர்மன்னன் சேதிசொல்ல
பொற்புவிமேவியே செல்வமருள் திருப்
பொன்மாதுபாதம் பதந்துணையே.

கார்திகழ்தர்மக் கொடையுடையாநந்த
கற்பகவள்ளல் கதையுரைக்க
பார்வதியாள் திருச் செங்கமலப்பதம்
பணிந்துநாளும் மிகத்தொழுவாம். (௬)

உம்பர்துதிக்க நிலம்வளர்த்த-ருக்கு
மாங்கதன் றன்கதை யானுரைக்க
அம்புவிபோற்றிய வாலைமனோன்மணி
அம்பிகைஞானப் பதம்போற்றி. (௭)

உத்தமனும்ருக்கு மாங்கதன் றன்கதை
உள்ளபடிக்கும்மி யானுரைக்க
புத்தகமாதாம் கலைவாணியென்னும்
புத்தியில்வந்து குடியிருப்பாள். (௮)

புத்தகவாணிக் குடியிருக்க-இந்த
உத்தமன் றன்கதை யானுரைக்க.
மைத்தப்புலவர் திருப்பதங்களெந்தன்
சித்தத்தில்நாளும் படிந்திருக்க. (௯)

பூமியுங்கூடப் புலமைசொல்லும்-புகழ்
பூத்தசெழுமண வைப்பதியாம்
நாமஞ்சிறுமண வூர்முனிசாமி
நவிலுங்கும்மிப் பிழைபொறுப்பீர். (௧௦)

மாதரையழைத்தல்.

கற்பகவல்லிக் கமலவல்லிமலர்
கஞ்சுகவல்லி ரஞ்சிதமே
பொற்கரத்தின்வளை மின்னலிடுஞ்-சிறு
பெண்களொருங்கென வாருங்கடி. (௧௧)

குங்குமவல்லிக் குமுதவல்லி-யடிக்
கோகனமாதுடன் மோகவல்லி
மங்களக்குங்குமக் கொங்கையரே-சிறு
மாதரனைவோரும் வாருங்கடி. (௧௨)

சித்திரரேகைச் சிவரேகை-யடி
செண்பகமேனகை யூர்வசியே

முத்தேபவளமே பூஞ்சரமேயடி
முப்பதுப்பெண்களும் வாங்களடி, (கங)

மாணிக்கமேபெண்ணே ஆணிப்பொன்னேகண்ணே
மல்லிகையேமனோ ரஞ்சிதமே
வாணியேநானொரு சேதிசொல்ல-நீங்கள்
வஞ்சியனைவோருங்கும்மியடி. (கச)

கும்மியடிசிறுப் பெண்டுகளா-ஞானக்
கும்மியடிமலர்ச் செண்டுகளா
செம்மையாயேகா தசிவிரதக்கதை
சிரித்துச்சொல்லியே கும்மியடி. (கரு)

நாட்டுச்சிறப்பு.

தேசமருபத்தி நாலினுமேபுகழ்
பேசியிருக்கும் புலவர்முன்னே
வாசந்திகழும் வித்ற்பநகர்வளம்
கூசாமற்சொல்லுவேன் கேட்டிடுமே. (கசு)

மேகங்கருத்து முருவலிடும்-குன்று
மேடெங்குஞ்சென்னல் கதிர்நெரிக்கும்
நாடெங்குந்தாவரப் பூச்சொரியுமந்த
நாற்றிசையோடைக் கரைபுரளும். (கஎ)

திங்கள்தவிரா மழைப்பொழியும்-அந்த
தேசத்திலெங்கும் பயிர்க்கொழியும்
கங்கைக்குசாகரம் பின்னிடையும்-சுற்றுக்
கானகமெங்கினுந் தேன்சொரியும். (கஅ)

வாழையுந்தெங்குக் குலைநெரிக்கும்-அதை
வர்ன்னக்கமுகு யிலைமரைக்கும்
வேழங்கள்வந்து தினமுரிக்கு-மெங்கும்.
வித்திடாத்தாவர மேசெழிக்கும், (கக)

ஓடைக்கரையில் மலரசையும்-அந்த
ஜாடையில்அன்னம் யிசைபுரியும்
கோடையிலுங்கதிர் தான்குளிரும்-பெருங்
குன்றுபோல்விருட்சம் கதிர்மறையும். (உ0)

எப்போதும்முப்போக மேவிளையும்-அங்கே
இன்னம்பலகனி யூர்நிறையும்
கப்பியசோலையும் வாவிகளுங்-கதி
ரோனைமறைக்க மிகவளரும். (உக)

நித்தமும்சென்னலின் காரருப்பார்-அதை
மொத்தமாய்க்குன்றெனப் போர்நிரைப்பார்
அத்தியைக்கொண்டு கதிருடைப்பா-ரங்கே
ஆழியைப்போலே குழித்தெடுப்பார். (உஉ)

நகரச்சிறப்பு.

சுற்றுக்குடிகளரப்பெருமை-யதை
சொல்லவுமுண்டோ கவித்திறமை
முற்றுந்திரளாஞ் ஜெனவுரிமை-யது
முன்னின்றசெங்கோல் வலுத்திறமை. (உங)

யாத்திரைப்பாதைப் பெருந்தடமும்-அங்கே
யாதுலர்க்கன்னஞ் சொரிமடமும்
நேத்திரங்கொள்ள வடங்கிடுமோ-அதை
தோத்திரஞ்செய்ய முடிந்திடுமோ. (உச)

வீதிக்குவீதி தேவாலயமுஞ்சுர
விஞ்சயர்சூழு மடாலயமும்
ஓதுந்தருமக் கலையிடமும்-பொது
ஒண்டொடிமார்கள் நிலையிடமும. (உரு)

நான்குவருண வகுப்பிடமும்-அந்தப்
பாங்கையுரைக்க யெவர்திடமோ
ஓங்குபுகழர சின்றிறத்தாற்றிரள்
சாங்கோபசாங்க மாகநிறைந்தார். (உசு)

பவளத்தோரண வீதிகளும்-பெண்கள்
பால்வடியும்முகச் சோதிகளும்
தவளவெண்குடை நீதிகளும்-மற்றத்
தாரெங்கும்போற்றும் பிரக்கியாதிகளும். (உஎ)

கற்றவர்சூழும் பெருமைகளும்-அங்கே
நாற்சாதிவர்ன்னப் பொருமைகளும்

கற்றவர்பேசுந் திறமைகளும்-அரக்
காவல்செலுத்தும் வுரிமைகளும். ௨௮

மாடமண்டப சாலைகளும்-சுற்றி
மல்லிகைமுல்லிகைச் சோலைகளும்
தேடரும்பற்பல வாலயமும்-அங்கே
தெய்வப்பூசையாரு வேளைகளும். ௨௯

கற்புடைமங்கையர் தன்செழிப்பும்-விலைக்
கன்னியர்சுந்திரத் தின்கொழிப்பும்
பற்பலமன்னர்கள் வந்தடுக்கும்-தினம்
பகுதிக்கப்பண சத்தங்களும். ௩௦

அந்திசந்திக்கடை சந்தைகளும்-வெகு
அடுக்குக்கட்டட விந்தைகளும்
முந்திப்பிந்திஜெனச் சுந்திரமும்-அங்கே
மொய்க்குழலார்விழித்தந்திரமும். ௩௧

வேதமொழுக்க மொருபுறமுங்-கீத
வீணைசுரங்கள் சிலபுறமும்
போதகச்சாலை பலபுறமு-மங்கே
புத்தகமாதுக் களேபறமும். ௩௨

அன்னதானங்கள் பலபுறமும்-ஒளிர்
சொர்ன்னதானங்கள் சிலபுறமும்
கன்னிகாதானம் ஒருபுறமுங்-கலி
யாணத்தின்சந்தடி யெப்புறமும். ௩௩

கரிகள்சாலை யொருபுறமும்-யுத்தப்
பரிகள்சாலை யொருபுறமும்
நெரியாய்சேனைப் பலபுறமும்-அங்கே
நிற்கும்ரதங்கள் மலையெனவும். ௩௪

மாதமும்மாரிப் பொழிமுறையும்-அந்த
மன்னவன்செங்கோல் மனுநெறியும்
ஓதிடசேடனுக் கேதெரியும்-எனக்
கொற்றைநாவாலே யெதுபிரியும். ௩௫

சரித்திரத்துவக்கம்.

இப்படிநீதித் தவராமல்-குடி
சொற்படிசெங்கோல் கடவாமல்
பற்படிமன்னர் பகுதிகட்டமுழுப்
பாரரசாள்கிற நாளையிலே. ௩௬

ஆறிலொருபங்குத் தான்சேர்த்து-அந்த
ஊர்முற்றும்பிள்ளைகள் போல்காத்து
நூறுபேர்தேவிமார் தன்னுடனே-யந்தப்
பாரெங்குந்தன்னர சாளையிலே. ௩௭

தேவிமார்நூறுபேர் தங்களிலே-தினந்
தெய்வவிசுவாச மங்கையராம்
ஆவிக்கிணையான சந்தியாவளியென்னும்
அம்மைவயற்றில் தவப்பலனால். ௩௮

இந்திரனென்ன விழியிலங்க-முழுச்
சந்திரனென்ன முகந்துலங்க
சுந்தரபிம்ப மென்விளங்க-நல்ல
மைந்தனைப்பெற்று மனங்களித்தாள். ௩௯

பிள்ளைபிறந்த தினங்குறிக்க-நகர்
வள்ளலின்பேரை யதுவுரைக்க
கள்ளமில்லாகுண மாதவர்தங்களால்
உள்ளபடிநாமஞ் சூட்டலுற்றார். ௪0

உருக்குமாங்கத மன்னனுக்குச்சுதன்
உதித்தவேளை தனைக்கணித்து
சிரக்குமேதரு மாங்கதனென்றிடச்
சீராய்நாம கரணமிட்டார். ௪௧

பிள்ளைபிறந்த மனத்தெளிவாலவர்
வெள்ளமாய்பொன்னை யள்ளித்தெளித்தார்
எள்ளளவுமனச் சஞ்சலமின்றியே
இருந்துவரசாளும் நாளையிலே. ௪௨

பட்டபஸ்திரீகள் அலங்கரிக்க-மலர்
பற்பலவேணுமென் றேசெரிக்க
வட்டமதாயொரு சோலைவைத்தார்-அந்த
வளப்பமிப்பொழு தாருரைப்பார் ௪௩

மூன்றறைக்காத மொருசவுக்காமதில்
ஜானுக்கொருமரந் தேங்கமுகாம்
வானென்றழைத்ததை யெட்டிப்பிடிக்க
வளர்ந்தப்பெருமரச் சோலேகளாம். ௪௪

மேகங்குனிந்து கனிபரிக்க-அதை
வேகமாயெட்டி யிலேயடிக்க
மோகமாகக்குயில் தான்படிக்க-மணம்
மும்மண்டலங்களு மேயடிக்க. ௪௫

கிச்சிலிமிச்சமாய்க் கீழ்பிரள-அதைக்
கிண்டியேவேர்பிலா மேற்றிரள
அச்சமாய்மாங்கனி தேன்துளிக்க-அசைந்
தாடுங்கிளேதோரும் பூச்சிரிக்க. ௪௬

வாழைக்கனிகள் கனிந்துதிர-வதை
வர்ன்னக்கிளிகள் மிதித்தெடுக்க
தூயவிளாங்கனி யேபிரள-வதை
தொத்திப்பறவைக ளேதிரள. ௪௭

கிள்ளேக்கனிகளேத் தின்றிரைக்கு-மது
அள்ளியேதேனேத் தெளித்தொக்கும்
உள்ளளவுங்கதிர் காந்தியிலாமலே
சில்லென்றிருக்குமச் சோலேயிலே. ௪௮

மல்லிகைச்சாலே யொருபுறமுந்-திகழ்
முல்லிகைச்சாலே யொருபுறமும்
துல்லியநந்தியா வட்டையொருபுறம்
மெல்லியர்போலே சிரித்திடுமாம். ௪௯

செண்பகச்சோலே யொருபுறமா-மங்கே
செந்தாழைவாவித் தடப்புறமாம்
பொன்னிரமாமனே ரஞ்சிதமெங்கணும்
புத்தமுதமணம் வீசிடுமாம். ௫௦

மந்தாரைக்கோங்கு ஒருபுறமாந்-திகழ்
செந்தாழைச்சோகு வெகுத்திரமாம்
பிந்தாதமன்மத பாணமொருபுறம்
பின்னலெனவே சொரிந்திடுமாம். ௫௧

கஞ்சமலர்திகழ் வாவியிலே-பின்னும்
வஞ்சிநிகரல்லிப் பூவதிலே
கொஞ்சிக்குலாவிய மன்மதலீலைபோல்
கோர்த்துக்குலாவி மலர்ந்திடுமாம். ருஉ

இன்னம்பலவித நன்மலருமதில்
வன்னம்பலபலவாங்கனியும்
இன்னதுஉண்டில்லை யென்றுசொல்லாமலே
யெப்பொருளுமதிற் கப்பிடுமாம். ருந

இப்படிச்சோலை வளம்வகுத்து-அதில்
யெண்ணருங்காவல் தினம்பகுத்து
கைப்பிடிநாயகி நூறுபேர்க்குமதிற்
காலையும்மாலையும்பூப்பரிப்பார். ருச

நித்தமிருகால் மலர்பறிப்பாரவர்
நேரமொருவா ரலங்கரிப்பார்
சித்தத்தைப்போலே நடந்துவருகையில்
சேதியைக்கேளாய்வனக்குயிலே. ருரு

சொல்லருமிக்கத் தவமுடைய ஒரு
வல்லவரான மஹாரிஷியும்
நல்லயிடமெங்கே கிட்டுமெனப்புவி
நாடெங்கும்சுற்றி வருகையிலே. ருசா

இந்திரனூர்புவித் தன்னிலுமிவ்வித
சுந்தரச்சோலையுண் டோவெனவே
வந்திவர்பார்த்து மனமகிழ்ந்துவிது
வாகுந்தவத்திற் கெனமதித்தார். ருஎ

உன்னிதமாம்பெருஞ் சோலையிலேரிஷி
உள்நுழைந்தேயொரு மூலையிலே
பன்னகசாலையும் உண்டுபண்ணியவர்
பரமசிவன்போற் றவமிருந்தார். ருஅ

இப்படியேரிஷி தானிருக்க-வேந்தன்
சொற்படியேமலர்க் கொய்திருக்க
எப்படிவிந்தை நடக்குதென்றே-சிறு
மைப்படிகண்ணியே கேளுங்கடி. ருகூ

பிரம்மாதிமுப்பத்தி முக்கோடிபேர்களும்
பின்னுமளவுள்ள தேவர்களும்
செம்மையுடனரிப் பூசைசெய்யப்புவி
சென்றுவந்தேமலர்க் கொண்டகல்வார். ௬0

பூமியில்வந்து மலர்ப்பரிக்கத்தெய்வப்
பூவையர்வந்திந்த சோலைகண்டு
நாமினியெங்கணும் செல்லவேண்டுவதில்லை
நல்லமலர்புண்ணிய சோலையென்று. ௬௧

கண்டமுதலிந்த சோலையிலே-தினங்
கங்குல்விடிந்திடுங் காலத்திலே
அண்டருலகத்து தேவவனிதையர்
ஆன்மட்டும்பரித் தேகடப்பார். ௬௨

தேவகன்னிய ரேயருக்கப்-புவி
ராஜன்மனையில் மலர்குறைய
காவலிருப்பவர் தங்களைநித்தமுங்
கடிந்துநூறுபே ரேதுசெய்தார். ௬௩

அளவுமீரிய சோலையிலே-மலர்க்
களவுபோவ தறியாமல்
உளவுங்காணத் தெரியாமல்-அந்த
ஒண்டொடிமார்கள் சினத்தெழுந்து. ௬௪

கணவனாகும் அரசனண்டையிவர்
குணக்குறைச்சலைத் தானுரைத்து
மணப்பயிற்சியை யேன்குறைத்தீரென
மன்றாடிநின்றிடும் வேளையிலே. ௬௫

காவலர்தங்களைத் தானழைத்து-நகர்க்
காவலனுமவர் மேற்சினந்து
பூவிற்களவு படுவதென்ன-இதை
பிடிக்கவும்மால் குறைவதென்ன. ௬௬

சோலைசுற்றிக்காவல் தானிருக்க-நகர்
மேலையுங்காவல் பலவிருக்க
காலையும்மாலை மலர்குறைவதென்ன
கண்டுபிடிக்கா விடில்துணிப்பேன். ௬௭

என்றுவரசனுங் கட்டளைசொல்லிட
நின்றுபாரக்கென வேநடந்து
நன்றிதைக்காணலா மென்றுத்துணிவுடன்
நாலெட்டுப்பக்கமுங் காத்திருந்தார். ௬௮

திரும்பிப்பாராமல் காத்திருந்தும்-ஒரு
அரும்புப்போவதறியவில்லை
பெரும்பழியினி வந்ததென்று இவர்
பேசியாலோசனை யேதுசெய்தார். ௬௯

அத்தனைபேரந்த காவலரில்-ஒரு
புத்தியில்லாத மடப்பயலும்
சற்றுமாலோசனை யில்லாமலேயவன்
மைத்தவரைக்கிண்டி யேதுரைப்பான். ௭0

தோயுந்தவத்தி லிருப்பவர்கள்-நிலம்
மேயும்ஆடுமாடு போலவல்லோ
காயுங்கனியும் சருகுதின்பாரெனக்
கதையுஞ்சொல்லுவா ரண்ணர்களே. ௭௧

பழமையான மொழிப்படியே-இங்கு
கிழவன்வந்தொரு மூலையிலே
பழமையாகத் தவமியற்று-மந்த
பாவிசெய்வானெனத் தோற்றுதென்றான். ௭௨

சரியேநீசொல்வ துண்மையடா-நாங்கள்
சற்றேமரதியாய் விட்டோமடா
விரைவாய்சென்றுப் பிடியுமடா-கொண்டு
வேந்தன்சபையில் விடுவமடா. ௭௩

பேசியேமூடர் மிகநடந்து-அந்த
போதமகாரிஷி முன்னடுத்து
தேசிகனேயுன்னை வேந்தனழைக்குறார்
தீவிரம்வாருமென் றேயுரைத்தார். ௭௪

கூடியநாள்வெகு காலமதாயிங்குக்
கோரித்தவமு மிருந்துளமே
தேடியெவரு மழைத்ததில்லை யிது
தெய்வச்செயலென் றெழுந்துவந்தார். ௭௫

கூட்டிரிஷியை நடத்திக்கொண்டு-வேந்தன்
குந்தியிருக்கும் சபைவிடுத்து
காட்டின்மறன்போலே காவலர்யாவரும்
கைகட்டிமெய்மரந் தேயிருந்தார். ௭௬

போதரிஷியி னெதிர்வருத்தை-அந்த
பூலோகமாளும் துரைபார்த்து
மாதவர்க்கேதிங்கு காரணமோவென்று
மன்னன் திடுக்கென் றெழுந்திருந்து. ௭௭

என்னால்செய்த தவப்பயனோ-எங்கள்
முன்னோர்பெற்ற வரப்பயனே
பொன்னின்றிருவடித் தானசைய-என்னை
பொருளாயெண்ணி தயைபுரிந்தீர். ௭௮

என்றுவரசன் மிகவணங்கித்தக்க
வாசனமிட்டிவன் கீழிரங்க
குன்றுபோல்நின்றுள காவலருமங்கே
கூக்குரலிட்டுட னேதுரைப்பார். ௭௯

சோலையிலேமலர் போகும்நிமித்தியம்
மேலையிவர்செய்த யோசனைப்போல்
சாலமகாரிஷி மீதுநிலவரம்
சாற்றினர்யாவ ரொருமுகமாய். ௮௦

துட்டர்கள்சொன்ன மொழிகேட்டு-ராஜன்
கிட்டியிருசெவிதானடைத்து
மட்டிப்பயல்களே சொற்பமலர்குற்றம்
மாரிஷிமீதோ சுமத்துகிறீர். ௮௧

காவலர்தாங்களைத் தான்கடிந்து-அந்த
கானமகாரிஷிக் கால்விழுந்து
கேவலமூடர் சிறுபிழையைச்சற்று
கர்த்தாவேநீர்பொருத் தாளுமென்றான். ௮௨

மன்னவனேவுந்தன் சோலையிலேமலர்
போகும்நிமித்தியங் காணவென்றால்
இன்னவர்தங்களா லீண்டதல்ல-அதை
யென்னென்றுகேள்சில நாள்அடங்கி. ௮௩

மாலுக்குப்பூசை புரியவேண்டி-இங்கு
நாளுக்குநாள் தினங் கங்குலிலே
மேலுலகாந்தெய்வ லோகத்துக்கன்னியர்
மெத்தநாளாய்மலர் பற்றுகிறார். அச

கண்டுபிடித்திட வேணுமென்றுலொரு
தொண்டுசொல்வேனது போல்நடந்தால்
விண்டுலகஞ்செல்லும் பூக்களவையிங்கு
கொண்டுகிரித்திடக் கூடுமென்றார். அரு

உத்தாரம்போலே நடப்போமென-உள்ள
மைத்தோரும்மன்னவ னும்பணிந்து
யெத்தியிருகரங் கூப்பிநிற்கதவப்
போதரிஷியும் புக்லுகின்றார். அசு

தாபரந்தன்னிற் கொடும்பிறப்பாம்-வெகு
சாபத்தால்வந்த மறுபிறப்பாம்
சுமத்துக்கொம்மட்டிக் காயின்விதைகளை
இந்தவனம்முழு தும்விரைத்து. அஎ

எங்கெங்குங்கொம்மட்டி தான்விதைத்துக்-கொடி
யெந்தச்செடியிலு மேதொடுத்தால்
அந்தரக்கன்னியர் தீண்டிடிலங்கனம்
அசுத்தையாகியே நின்றிடுவார். அஅ

நேரினிற்கண்டு பிடித்திடலாம்-அவர்
ஆரெனவிண்டு தெரிந்திடலாம்
ஊரையும்பேரும் மறிந்திடலாமையா
உன்மனச்சஞ்சலம் வென்றிடலாம். அகூ

மன்னனுக்கிவ்வா றுரைத்துவிட்டு - அங்கே
மற்றுமுள்ளோருக் காசிர்வதித்து
பன்னகசாலை தனையடுத்து ரிஷி
பாரதவத்தி லிருந்துகொண்டார். கூ0

மாதவர்சொன்ன மொழிப்படியே-அந்த
காவலர்தங்களுக் கேவலிட்டு
ஆதவன்போலவே மன்னவன்செங்கோல்
அரசுபுரிந்திடும் நாளையிலே. கூக

எத்தடத்துமுள்ள கொம்மட்டிக்காய்களை
யெண்ணற்றபேராகச் சேகரித்து
வித்தகமான மலர்ச்சோலையெங்கணும்
விரைத்துநெடுகே பயிர்விளைத்தார். கூஉ

வட்டமதிப்பிறை மீதுகருமாசி
வந்துபடர்ந்துள தன்மையைப்போல்
திட்டமானமலர் மீதினிற்கொம்மட்டி
தீவினைப்போலே படர்ந்திடுமாம். கூங

கந்தப்பரிமள சந்தணவிருட்சத்தில்
வந்துவிடநாகம் சேர்வதுபோல்
அந்தமுள்ளமலர்ச் சோலையிற்கொம்மட்டி
ஆக்கினையாலே படர்ந்திடுமாம். கூச

இப்படிகொம்மட்டி பூஞ்சோலையெங்கணும்
யெட்டிப்படர்ந்து துளிர்த்திடுங்கால்
மைப்படிகண்ணியாம் தெய்வப்பெண்கள் - மலர்
வழக்கம்போலே பரிக்கவந்தார். கூரு

நித்தவழக்கம்போல்பரிக்க - அவர்
மெத்தவிருட்டினில் வந்திரங்க
அத்தனைபேரி லொருமாதுதீண்டவே
அசுத்தையாகி நிலைத்துவிட்டாள். கூசு

எழுபேர்கன்னியில் மாதொருத்தி - யந்த
பாழுங்கொம்மட்டி மிதித்திடவே
சூழும்ஆறுபேர் தங்களைக்கூவியே
தாழயிருந்தவ ளேதுசொல்வாள். கூஎ

எந்தன்வினைவந்து முன்னிருந்துப்-பாழும்
நிந்தைகொம்மட்டி மிதித்துவிட்டேன்
அந்தரஞ்செல்லவும் சத்தியில்லைநீங்க
ளாருபேர்பூசை நடத்துமென்றாள். கூஅ

அசுத்தையாகி யொருமாது-அங்கே
அசைவில்லாமலே நின்றிருக்கும்
வசத்தைக்கண்டு தவமுனியும்-அந்த
வனத்துக்காவலரையழைத்து. கூகூ

இக்ஷணமேசபை தானடுத்து-மன்னன்
யெத்தொழில்செய்யினு மேயழைத்து
தக்ஷணம்நான்வரச் சொன்னதாக-இந்த
தாவிலழைத்து வருவீரென்றார். ௱

போற்றியென்று விடையெடுத்து-நல்ல
காற்றிலும்வேக மாகநடந்து
சாற்றியரசன் றனையழைத்து-அந்த
தக்ஷணஞ்சோலை யடுத்தனரே. ௱க

மன்னனுக்காக மனமிரங்கிமுனி
பன்னகசாலையை விட்டிரங்கி
பொன்னுலகமங்கை நிற்குமதிசயம்
பூபதியேவதோபாருமென்றார். ௱உ

தெய்வமடந்தைதனைப்பார்த்து மன்னன்
ஐயமுடனருகேயடுத்து
கைகளிரண்டையு மேகுவித்துஅவட்
காலில்விழுந்து சரணமென்றான். ௱௩

சரணமென்ற மதிமுகத்தை தெய்வ
சாரணிகண்டு ஆசீர்வதித்து
கருணையுள்ளகுல மன்னவனே யெந்தன்
காலவிதிதனைக் கேளுமென்றாள். ௱௪

விதிமுதலாய்மற்ற தேவருக்கு அவர்
விண்டுவின்பூசை செய்வதற்கு
பிரதிதினமும்மலர் கொய்துசெல்வோம் இதைப்
புண்யவனமென்றே நாங்கள்சொல்வோம். ௱௫

தேவர்முனிவர் இருடியன்றி மற்ற
பூலோகர்கண்ணிற் படமாட்டோம்
பாவியான்செய்த தவக்குறையால் இன்று
பாழுங்கொம்மட்டி மிதித்துவிட்டேன். ௱௬

அந்தரஞ்செல்லவும் ஆகவில்லை யினிப்
பிந்தவும்பூலோக மானதொல்லை
இந்தவசுத்த மதுநீக்கி னன்
யேகவுபகாரஞ் செய்யுமென்றாள். ௱௭

என்னுலேயாகு முபகாரம்-அதை
இன்னதென்றேவருட் செய்திடுங்கால்
தன்னுலேயானுல் தடையுமில்லை-தயை
செய்துத்திருவாய் மலருமென்ளுன். ளஅ

ஆகமம்போற்றும் வைகுண்டயேகாதசி
அற்புதநல்விர தப்பலனை
ஏகமனதுடன் தத்தஞ்செய்தாலின்று
யென்னிடதோஷம் விலகுமென்ளுன். ளகூ

மாலடிக்கன்புசெய் மாதரசேஇந்த
மண்ணிலேகாதசி யின்னதென்று
நாளுநடத்திலேன் கேட்டுமிலேனையோ
ந[illegible]ன்னசெய்குவேன் பேதையென்ளுன். ளக0

நீதிதவருத வள்ளலேநீயந்த
சேதியறியாத துண்மையப்பா
ஓதிடுமுன்தேவி நூறுபேர்தங்களில்
உத்தமிசந்தியா வளிதனக்கு. ககக

வேணவறுசுவை தான்சமைக்கும்-ஒரு
போனகத்திசமயற்றிரத்தில்
காணும்பெரும்பிழை யாலேகடிந்துக்
கடியசிறையி லடைத்துவைத்தாள். ககஉ

அன்றைக்கொருபொழு துண்டியுடனிவள்
அரியசிறையி லிருந்தனளாம்
சென்றுமருதின மும்விடுக்காமலே
சீற்றத்துட நாசியிருந்தாள். ககங

முந்தநாளோர்பொழு தன்னத்துடனிரு
முப்பதுநாழியுந் தான்கிடக்க
பிந்தநடுநா ளுமிநீரும்வற்றியே
அந்திப்பகலும் விழித்திருந்தாள். ககச

போனகத்தியை யிரண்டுநாளுஞ்-சிறை
போட்டதைத்தானன்று நாட்டம்வைத்து
ஆனபிழைக்கிரு நாள்சிறைபோதுமென்
றங்கனம்முன்னுட் காலேவிட்டாள். ககரு

மூன்றுநாட்காலை சிறையகற்ற-யிவள்
முழுகிக்குளித்து தலைவகிர்ந்து
சாற்றநற்கறி போஜனந்தின்றுதன்
சங்கடமற்றுச் சுகித்திருந்தாள். ௧௧௬

கேட்டையோமன்னவா சந்தியாவளியென்னும்
கீர்த்திசேர்வுன்னுடை தேவியினால்
வீட்டுவெள்ளாட்டியாம் போனகத்திமுன்னால்
விட்டுக்குறையால் பலித்திடும்நாள். ௧௧௭

விட்டக்குறையால் பலித்திடும்நாளின்
விபரத்தைக்கேளினி மன்னவனே
தொட்டக்குறையென வுஞ்சொல்லாமவள்
தெய்வமின்னென்றும்புகன்றிடலாம். ௧௧௮

ஓர்பொழுதுண்டுச் சிறையடைந்தநா
ளோங்குந்தசமிய தாகுமையா
பாரறியப்பகல் யிரவுமுபவாசம்
பட்டநாள்ஏகா தசியாகும். ௧௧௯

அவத்தைகள்நீங்கிப்பின் காலையில்நீராடி
அன்னம்புசித்தநாள் துவாதசியாம்
தவத்தாலிம்மூன்று நாளுங்கிடைத்தது
தாராளும்மன்னவா கேளுமினி. ௧௨0

அன்னவனைக்கொண் டேகாதசியின்பலன்
மன்னவாநீதத்தஞ் செய்திடிலோ
பொன்னுலகஞ்சென்று நான்பிழைப்பேன்மெத்தப்
புண்ணியமுண்டுனக் கென்றுரைத்தாள். ௧௨௧

தேவகன்னிசொன்ன வாரதுபோல்மன்னன்
ஆவலாகமனை தானடுத்து
பாவையாஞ்சந்தியா வளியாலேயந்த
பாக்கியவதியின்னு ளென்றறிந்து. ௧௨௨

ஜென்மாந்திரத்தின் றவப்பலன்நேரிட்டுத்
தெரியாமல்செய்த தவப்பலனை
பொன்பதிகன்னிக்கு தத்தமிடச்சொல்லி
பூதலமன்ன னருள்புரிந்தான். ௧௨௩

வேந்தனுரைத்திட்ட கட்டளைப்போலந்த
மாந்துளிர்மாது வணங்கிவந்து
தாழ்ந்துகள்ளுடன் நீர்கொணர்ந்துபலன்
தாரைவார்த்தாள்தெய்வ மாதினுக்கு. ௧௨௪

அசுத்தைநீங்கிப் பவந்துலங்கு-அங்கு
அந்தரமார்க்கம தாய்கிளம்ப
விசையாய்நின்றுள தெய்வகன்னியொரு
விருப்பங்கொண்டங்கு யேதுசொல்வாள். ௧௨௫

சாலப்பரவுப காரம்விரும்பிய
சந்திரகுலசத்திய மன்னவனே
மேலுவகோர்செய்யும் இந்தவிரதத்தை
மெல்லியுஞ்சொல்லுவேன் கேளுமென்றாள். ௧௨௬

பூர்வத்திலேவெகு காலமுந்தி-யந்த
பொன்னுலகிந்திரமா ராஜனுக்கு
தூருவாசமுனி சாபத்தினால்வந்த
தொந்தரைக்கேள் சந்திரபூபதியே. ௧௨௭

தன்விஷயத்திற் குறைநடந்த-அந்த
பொன்னுலகிந்திரனைப்பார்த்து
பொன்மகளுன்பதி விட்டகன்றுயினி
பெரியவள்வாழக் கடவதென்றார். ௧௨௮

பாரமுனியிட்ட சாபத்தினாலந்த
பட்டணமும்மற்ற தேவர்களும்
தாரதம்மியந் தானுமற்று-அவர்
தக்கச்செயலுந்தொழிலுமற்று. ௧௨௯

இந்திரனூர்பதி ஜீவகோடி-பல
அந்திரவாசி பலகோடி
சந்ததமும்வெகு துன்பமுற்று-இவர்
சற்பசயனன் றனைத்தொழுது. ௧௩௦

வாரணத்தினிடர் தான்தவிர்த்த-ஹரி
நாரணன்றன்னடிப் பாரணமாய்
ஆரணத்தின்வழி தன்விதியேதேவர்
அனேககாலந் துதிபுரிவார். ௧௩௧

பிரம்மாதிருத்திர தேவர்களு-மங்கு
பின்னுங்கதிர்மதியானவரும்
நிர்ம்மலமாக அணுவுமுணவன்றி
நெரியாயொருங்கே விரதமதாய். ௧௩௨

ஏகாதசியின் பகலிரவுமவர்
யேகாந்தமாகத் தவமிருந்து
வேகமாய்மந்தர மலைகொணர்ந்தேயவர்
வைத்துத்திருப்பாற் கடல்தனிலே. ௧௩௩

அன்றுமுழுதுங் கடல்கடைந்துதேவர்
அடுத்தநாட்காலை துவாதசியில்
நன்றெனஸ்ரீநாதன் தேவியருமப்போ
நாடித்திருவவ தாரஞ்செய்தாள். கரு௫

அகிலலோகமாதா பொன்மகளை-யந்த
அண்டகோடிதேவர் சேவைசெய்து
ஜெகமளந்தஸ்ரீமந் நாராயணனுக்குத்
திருமணஞ்செய்து மனமகிழ்ந்தார். கரு௬

மங்களமாக மணமுடித்து-அங்கு
மாதவர்யோகி விருடிமுதல்
சங்கையரவே யமுதமுண்டபின்னர்
சுவாமியுரைத்ததைக் கேளுமன்னா. கரு௬

இன்றுமுதல்பிரம்ம ருத்திராதியாவரும்
யிந்தயேகாதசி மாவிரதம்
நன்றுய்ஸ்மரித்து வருபவன்றனக்கு
நாலெண்தலைமுறை மோட்சமென்றார். க௬எ

நாதனுரைத்திட்ட கட்டளைப்போலிது
நாள்வரைக்குந்தெய்வ லோகமெல்லாம்
பேதமின்றிநடந் தேரும்விரதத்தை
பூமியிலேயுனக் காயுரைப்பேன். கரு௮

சந்திரகுலத்துப் புரந்திரனே-செவி
சாற்றுவாய்நீசெய்த புண்ணியத்தால்
அந்தரலோக விரதப்பலனை-யிங்கே
ஆதியோடந்தமுனக்குரைப்பேன். கரு௯

திங்களின்தோறும் தசமியின்காலையில்
தீர்த்தமாடித்திருக் காப்பணிந்து
மங்களமாயரித் தியானஞ்செய்து-அன்று
மத்தியானவேளை யொருபொழுதே. க௬0

அன்றொருவேளையே அன்னமெடுத்து
அடுத்தயேகாதசி நாள்முழுதும்
பன்னகசயனன் றன்திருநாமமே
பாராயணஞ்செய்வ தன்றியிலே. க௬க

ஆகாரநித்திரை தானொழித்து அன்
றறுபதுநாழிகை யும்விழித்து
வாகாய்புராண மிதிகாசகேள்வியில்
வணக்கமாக செவிகொடுத்து. க௬உ

துர்ச்சனர்மூடர்கள் யீனர்சண்டாளர்கள்
துட்டர்தெரிசனந் தானொழித்து
சர்ச்சனர்கூட்ட நடுவிருந்தன்றிரு
சுவாமிகதையால் விடியவைத்து. கசந

விடிந்தக்காலை துவாதசியாமன்று
அடர்ந்துக்கஞ்ச மலர்க்குளத்தில்
துடர்ந்துகுளித்துத்திருமணிட்டு-நல்ல
துளசிமாலை மலரணிந்து. கசச

அன்னமறுசுவை யால்பழம்பொங்கல்
அரிக்காராதனைத் தான்புரிந்து
நன்னயமான வதிதிசிலருக்கு
நாடிப்பரிமாரி நீபொசிப்பாய். கசரு

இப்படியேகா தசிவிரதந்தன்னை
கைப்பிடிநாயகி நீயுமதாய்
ஒப்பிநடந்திடில் ·தெய்வலோகத்திலே
உம்பர்க்குமேலாக வாழ்ந்திடுவாய் கசசு

கன்னிகைத்தீட்டை தவிர்த்துதெய்வலோகம்
காட்டியுபகாரம் செய்தவுந்தன்
நன்னயத்தாலே பிரதியுபகாரமாய்
நானுரைத்தேன்நட மன்னவனே. கசஎ

நன்றாய்விரதம் விரித்துரைத்து-அந்த
நங்கையும்மன்னவ னைப்புகழ்ந்து
மின்கொடிபோல வாகாயங்கிளம்பியே
மெல்லிதெய்வலோகம் போயடுத்தாள். கசஅ

மங்கையுஞ்சென்று மறைந்தவுடனந்த
மன்னவன்காவ லரையழைத்து
இங்குளகொம்மட்டி யாவையும்வெட்டியே
யிட்சணம்சுத்தப் படுத்துமென்றான். கசகூ

ஆருக்குமிம்மலர் சோலையிலே-ஓர்
அரும்புமருந்திடக்கூடாது
சீர்பெருந்தேவதா ஸ்ரீகளேநித்தமும்
சென்றுபரித்திட வேணுமென்றான். கருO

ஆக்கினையிப்படி சொல்லிவிட்டு-மன்னன்
அரண்மனைக்கு யெழுந்திருந்து
யோக்கியமானத் தபோதனர்வேதியர்
உத்தமமந்திரி தன்னுடனே. கருக

சோலையில்தெய்வப்பெண் வந்ததுவும்-அந்த
வேளையில்மாமுனி சொன்னதுவும்
சாலவணங்கியே நின்றதுவுமதன்
சாதித்துச்சென்றதவப்பலனும். ௧௫௨

முற்றும்விபர முடனுரைக்க-அந்த
உத்தமர்கேட்டு மனமகிழ்ந்து
மெத்தவும்நீபுண்ய சீலனையாவென்றும்
மென்மேலும்ஆசிர் வதித்துரைப்பார். ௧௫௩

தேவதாஸ்திரீயா லுபதேசிக்கப்பெற்ற
தெய்வவிரதத் தவப்பலனை
பாவலராலும் புகழ்தாமோவுந்தன்
பாக்கியமேதெய்வ பாக்கியமையா. ௧௫௪

சாதியிலீனர்சண் டாளரேயாயினுஞ்
சாதித்தோராண்டு நடந்துகொண் ல்
நீதிப்படியிரு பத்தோர்தலைமுறை.
நிலையாய்மோட்ச மடைந்திடுவார். ௧௫௫

இப்படிமேலோர் விரித்துரைக்கமன்னன்
யின்பரமேலும் சந்தோடமதாய்
ஒப்பியேவெண்குடை கீழிருக்குங்குடி
யொவ்வொருஜீவ ரனைவரையும். ௧௫௬

வன்னுஸ்ரமந் தவறுமல்-நாலு
வகுப்பாஞ்சாதி யனைவரையும்
என்போல்விரதம் பயிற்றிவைப்பதன்றே
ராஜர்க்குடைமனு நீதியென்றான். ௧௫௭

பின்னுமரசன் கருணைப்பெருங்குணம்
பேதமில்லாவர சின்திறமும்
நன்னயமந்திரி மற்றவருங்கேட்டு
ஞாயமென்றேமனந் தான்மகிழ்ந்தார். ௧௫௮

அங்கனம்மந்திரி யின்முகத்தை-நீதி
யரசன்கருணை யுடன்பார்த்து
இங்ஙனம்நம்மக் குடையரசின்பூமி
யாவற்றிலும்பறை சாற்றுமென்றான். ௧௫௯

என்னவென்றுபறை சாற்றுகிறாரங்கே
யீரெட்டிரண்டான சாதிகட்கும்
இன்றுமுதல்பிரதி மாதமேகாதசிக்
கிட்டிடுங்கட்டளைக் கேளுமென்றே. ௧௬௦

அண்ணுக்கயர்கட்டும் பிள்ளைமுதலா
யமங்கலிமங்கிலி கன்னியரும்
பின்னமில்லாமலே பனிரெண்டேகாதசி
பிரித்தவாக்கினைப் போல்நடப்பீர். ௧௬௧

தசமிதோருந் தலைமுழுகி-நச
நாமந்திருமணித்தானணிந்து
விசனமற்று ஒருவேளையுண்டியே
வேண்டியாண்டவனைத்துதித்து. ௧௬௨

நடுநாளேகாதசி முற்றிலுமேயுங்கள்
நாவிலுமிநீர் விழுங்காமல்
நெடுமால்நாம மிரவும்பகலிலும்
நிந்தாஸ்துதியாய்த் தவமிருந்து. ௧௬௩

கொல்லுதலற்று கொடுமையற்று-வீண்
கோள்மொழியற்று குணங்களற்று
வல்லமையற்றுநம் வைகுண்டநாதனை
வாஞ்சனையாக மிகத்தொழுது ௧௬௪

உண்டியுமற்று உணவுமற்று- பல
ஊக்கமற்றுபெருந் தூக்கமற்று
எண்டிசையோரும் யிரவும்பகலன்று
யீசனையாசை யுடன்தொழுது. ௧௬௫

ஆலயஞ்சென்று வலம்புரிந்து-அவ
தாரப்பெருமை பலபுகழ்ந்து
லீலாவினோத மகிமையெல்லாம்-வெகு
மேலாய்பேசியே கண்விழித்து. ௧௬௬

துவாதசியாகுமூன் றுநாளின் காலையில்
தீர்த்தங்களிற்சென்று ஸ்நானஞ்செய்து
துவாதசநாமந் திருமணியும்பூண்டு
தூயத்திருத்துழா புவுகமுண்டு. ௧௬௭

அதிதியொருவரைத் தானழைத்து-மிக
அன்புடன்போற்றி யுபசரித்து
விதிதவராம லறுசுவையோடே
விருந்துப்லகாரந் தானளித்து. ௧௬௮

இப்படிமாத மிருமுறையும்-வரும்
ஏகாதசிதோரு மாக்கினைப்போல்
செப்பிடுமென்குடைக் கீழிருக்குங்குடி
ஜீவரனைவோருந் தானிருப்பீர். ௧௬௯

என்றுட றமிகத் தான்சாற்றி-யங்கு
யெத்தி சயுள்ள வரைத்தேற்றி
அன்றுமுதலிந்த ஏகாதசியைத்தன்
ஆளுகையெல்லாஞ் செலுத்திவந்தான். க௭0

நாளைக்குஞ்செல்வங் குறையாமல்குடி
யாளுகையொன்றுந் தவறாமல்
வேளுக்கிணையான பிள்ளையுடன்புவி
விண்ணவர்போற்றச் சுகித்திருந்தான். க௭க

கருணைகுணருக்கு மாங்கதன்றன்கதை
கண்டதைவிண்டே னவர்சுதனும்
தருமாங்கதனுர் சரித்திரத்தை-யினி
சாற்றுவேன்ரெண்டா முறையொருநூல். க௭௨

வேண்டியிந்நூலைப் படித்தவருமிந்த
விரதம்போலே நடந்தவரும்
பாண்டவர்போலவை குண்டத்தின்மேவியே
பற்பலகாலுஞ் சுகித்திருப்பார். க௭௩

பாடிப்படித்த வரும்வாழ்கப்-பதம்
பன்னிப்பிரித்துரைத் தோர்வாழ்க
தேடியச்சிட்ட சிதம்பரவேளுக்கு
தெய்வசகாய மென்மேலோங்க. க௭௪

ருக்குமாங்கதன் சரித்திரக்கும்மி

முற்றுப்பெற்றது.